**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No.163 /2023, Kunnam P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாக்கியராஜ் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | செல்வராஜ் | Occupation | : | கூலி |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 35 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.09.2025. | | | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1-வது எதிரி எனது அம்மா, 2-வது எதிரி எனது அப்பா, 3-வது எதிரி எனது தம்பி. இந்த வழக்கில் புகார் அளித்த பட்டியல் சாட்சி 1 தனலெட்சுமி எனது மனைவி. சுமார் 2 வருடத்திற்கு முன்பு காலை 8.30 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தமாக இருந்தது. வெளியே சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்தது. அவர்களுக்குள் அசிங்கமாக பேசி சண்டையிட்டு கொண்டிருந்தனர். அப்போது நான் அரிவாள்மனையை எடுத்துக்கொண்டு சென்றேன். கூட்டத்தில் யாரோ ஒருவர் என்னை தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்துவிட்டேன். அப்போது என் கையில் இருந்த அரிவாள்மனை எனது வலது கையில் பட்டு ரத்தம் வந்தது. கூட்டமாக இருந்ததால் யார் என்னை தள்ளிவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது எனக்கு மட்டும்தான் காயம் ஏற்பட்டது. என் மனைவிக்கோ, என் மாமியார் வெள்ளையம்மாளுக்கோ எந்த காயமும் ஏற்படவில்லை. காயம் பட்ட என்னை என் உறவினர் ஒருவர் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். அப்போது எனக்கு அடிப்பட்டதில் சுயநினைவுடன் இல்லாமல் மருத்துவ சிகிச்சையில் நான் இருந்தேன். எனது மனைவி குன்னம் காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு வந்து என்னை மருத்துவமனையில் பார்த்தார். அவர் கொடுத்த புகாரில் என்ன எழுதி இருந்தார் என்று எனக்கு தெரியாது. தற்போது எனது மனைவி என்னுடன் பேச்சுவார்த்தை இல்லாமல் தனியாக என் குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இவ்வழக்கின் எதிரிகளான எனது அப்பா, அம்மா, தம்பி

DMC KUNNAM

ஆகியோருக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் எனது அப்பா, அம்மா, தம்பி ஆகியோருடன் ஒன்றாக வசித்து வருகிறோம். அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டேன். அவர்கள் மீது எந்த மேல் நடவடிக்கையும் வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. போலீசார் விசாரணையில் கடந்த 21.03.2023 ம் தேதி காலை 07.45 மணிக்கு நானும் எனது மனைவி தனலெட்சுமியும் வீட்டில் இருந்தபோது அங்கு வந்த என் அம்மா பழனியம்மாள், எனது அப்பா செல்வராஜ், தம்பி இளையராஜா ஆகிய மூன்று பேரும் சேர்ந்து என்னை அசிங்கமாக திட்டி கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல, அப்போது எனது மனைவி, எனது மாமியார் அடிக்காதீங்க என்று சத்தம்போடவே அவர்களை என் தம்பி இளையராஜா தள்ளிவிட்டு விட்டு அருவாமனையை எடுத்து எனது வலது கை விரல்களின் மேல் அறுத்துவிட்டார் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUDICIAL COURT, KUNNAM